**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2020**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. ஒளியுள் ஒளியானவன் யார்?
2. தாய் போன்ற பெருமையுடையது எது?
3. முடியரசனாரின் இயற்பெயர் யாது?
4. தேசம் என்ற சொல்லின் பொருள் யாது?
5. திருக்குறளில் உள்ள பாடல்கள் எத்தனை?
6. நாலடியாரைப் பாடியவர்கள் யார்?
7. வீரமாமுனிவரின் தாய்நாடு எது?
8. பட்டுச் சேலைக்குச் சிறப்பு மிக்க ஊர்?
9. இராமன் விளைவைக் கண்டு பிடித்தது யார்?
10. 'வற்றல்' என்பது என்ன ஆகுபெயர்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. இளவேனில் காலத்தில் வீசும் காற்றின் பெயர் என்ன?
2. இறைவன் எந்த நிழல் போன்று இன்பம் தருபவன்?
3. பள்ளிக் கூடத்தில் சிறுவர்கள் என்ன செய்கிறார்கள்?
4. எவற்றை அபிராமியின் கடைக்கண்கள் தரும் என்று அபிராமிப்பட்டர் கூறுகிறார்?
5. யார் சொல்படி நடக்க வேண்டும் என்கிறார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்?
6. விருந்தினர்களின் பெட்டி படுக்கைகளைத் தலைவி எங்கு வைத்தாள்?
7. நஞ்சு உண்ட நாயக மூர்த்தி வீட்டில் யார் யார் இருந்தார்கள்?
8. காஞ்சிபுரத்திற்கு உள்ள இரண்டு சிறப்புகள் யாவை?

9. பதினாறு கால் மண்டபத்தைக் காப்பாற்றியவர்கள் யாவர்?
10. உயிர்மெய் எழுத்து என்றால் என்ன?
11. திணை எத்தனை வகைபெறும்? அவை யாவை?
12. காரணப் பெயர் என்றால் என்ன?
13. வேற்றுமை என்பது என்ன?
14. வினைச்சொல் எவற்றைக் காட்டும்?
15. பெயர்ச் சொல் முன் பெயர் சேர்வதற்கு எடுத்துக்காட்டு தருக.

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. மரபுக்கவிதையின் வகைகள் யாவை?
2. மாத்திரை என்றால் என்ன?
3. கரிகாலன் என்ற மன்னன் புலவர்க்கு அளித்த பரிசு யாது?
4. சைவக்காஞ்சி, வைணவக் காஞ்சி – குறிப்பிடுக.
5. அரிச்சந்திரன், தொல்காப்பியன், ஆவுடையப்பன் என்ற பெயர்கள் எவ்வாறு கூப்பிடப்படுவதாக அப்பா குறிப்பிடுகிறார்?
6. சோழன் கிள்ளியின் களிறு எங்கே கால் வைத்தது?
7. இயேசு யாரால் வணங்கப்படக் கூடியவர்?
8. நாலடியார் – குறிப்பு வரைக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. இறை வாழ்த்து என்றால் என்ன? திருவருட்பாவில் வள்ளலார் இறைவனை எவ்வாறு வாழ்த்துகிறார்?
2. இராமன் விளைவு – விளக்குக.
3. அறுவகைப் பெயர்ச் சொற்களை விளக்குக.

**பகுதி – உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. 'மரங்களுள் சிறப்பானது வாழைமரம்' – விளக்குக.

2. இயேசு பெருமானின் பெருமைகளாக வீரமாமுனிவர் குறிப்பிடுவன யாவை?

******